"ஒண்டுக்குளி கிளை நூலகம்"
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1–25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 வைகாசி 12 ரம்ழா 4 இதழ் 104
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 25-5-1985

இலங்கைத் தமிழர் பிரச்னை
சோவியத் தலைவர்களுக்கு ரஜீவ் விளக்கினார்
'சிவா' நன்றி கூறுகிறார்

[சென்னை]

இலங்கைத் தமிழர் பிரச்னையை சோவியத் தலைவர்களுக்கும், ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் திரு. பில்ஹெய்டனுக்கும் எடுத்து விளக்கியமைக்காக இந்தியப்பிரதமர் திரு. ரஜீவ் காந்திக்கு த. வி. கூ. தலைவர் திரு மு சிவசிதம்பரம் நன்றி தெரிவித்துள்ளார்.

திரு சிவசிதம்பரம் சென்னையில் நேற்றுத் தெரிவித்திருப்பதாவது: இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா

(6ம் பக்கம் பார்க்க)

8 ஆக அதிகரிப்பு

[திருகோணமலை]

நிலாவெளியில் இடம் பெற்ற சம்பவத்தில் பலியானவர்களின் தொகை எட்டாக அதிகரித்துள்ளது என்று திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் மன்றங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதிகளை ஆதரிப்பதைவிட
இலங்கையை இந்தியா கைப்பற்றுவது சிறந்தது!

பாராளுமன்றத்தில் பிரதமர்

(பி. ராஜரட்ணம்)

"இலங்கைத் தமிழ்ப்பயங்கரவாதிகளை ஆதரிப்பதைவிட இந்தியா, இலங்கையைக் கைப்பற்றுவது ஒரு சிறந்த நடவடிக்கையாகும். இதன் மூலம் வீண் அழிவுகளைத் தடுக்கலாம்" என்று பிரதமர் ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

கோட்டே ஸ்ரீஜயவர்த்தனபுர பாராளுமன்றில் நேற்று அவசரகாலச் சட்டம் நீடிப்புத் தொடர்பான விவாதம் தொடர்ந்து இடம்பெற்றது. அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். திரு. பிரேமதாசா தொடர்ந்து பேசியதாவது: "இலங்கை இந்தியாவுடன் போராடமுடியாது. அது ஒரு பலம்மிக்க நாடு. எனவே இந்தியா, இலங்கைத் தமிழ்ப் பயங்கரவாதிகளை ஆதரிப்பதைவிட இலங்கையைக் கைப்பற்றுவது மேலான ஒரு செயலாகும்.

(6ம் பக்கம் பார்க்க)

ஜே. ஆர். - ரஜீவ் விரைவில் சந்திப்பு

(புதுடில்லி)

இந்தியப்பிரதமர் திரு. ரஜீவ்காந்தியும் இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் விரைவில் சந்தித்துப் பேசும் வாய்ப்புப் பற்றி இந்திய அரசியல் உயர் வட்டாரங்களில் மீண்டும் பேச்சு அடிபடுகின்றது.

இப்பேச்சு வார்த்தைகளுக்கான ஏற்பாடுகள் இன்னமும் ஆரம்ப கட்டத்திலேயே இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

[6-ம் பக்கம் பார்க்க]

பி. டி. ஐ. நிருபர் வழக்கு வாபஸ்

[கொழும்பு]

பி. டி. ஐ. நிருபர் கிருஷன் ஆனந்த் மீதான வழக்கை அரசாங்கம் வாபஸ் பெற்றுள்ளது.

(6ம் பக்கம் பார்க்க)

"பாதுகாப்பு ஏற்படும்வரை பாடசாலைகளை மூடிவிடுக!"

யாழ் அரச அதிபருக்கு பெற்றோர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க அதிபரை நேற்றுச் சந்தித்த யாழ். பெற்றோர் சங்க உறுப்பினர்கள், தகுந்த பாதுகாப்பான சூழ்

[5-ம் பக்கம் பார்க்க]

"களனிப் பாலத்துக்குகூட பாதுகாப்பு இல்லை!"

சபையில் அநுரா கிண்டல்

(ஸ்ரீஜயவர்த்தனபுர)

"நான் நேற்றுகட்டுநாயக்காவிமான நிலையத்திலிருந்து கொழும்புவந்தேன் அப்போது அவ்வீதியிலுள்ளகேந்திரஇடங்களில் பொலிசாரையோ, அல்லது பாதுகாப்புப் படையினரையோ காணவில்லை. களனிப் பாலம் கூடப் பாதுகாக்கப்படவில்லை" என்று எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயக்கா நேற்றுப் பாராளுமன்றத்தில் கவலை தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்: "தெற்கில் 30 ஆயிரம் பேர் கொண்ட பயங்கரவாதஅமைப்பொன்று உருவாகுவதாகத் தகவல்கிடைத்துள்ளது. உமா, பிரபா ஆகிய இருவரும் மார்க்ஸிசவாதிகள். இவர்களுக்குப் பின்னணியில் ஜே. வி. பி. இயங்குகிறது" என்றார். (கி)

இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பக்கோரும்
கறுப்பன் மனு நிராகரிப்பு!
வெளிநாட்டுப் பிரச்னை என்று தீர்ப்பு

(சென்னை)

இலங்கைக்கு இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று சென்னை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டது

"வெளிநாட்டுப் பிரச்னையில், ஒரு நாட்டு நீதிமன்றம் தலையிடுவது அல்லது தலையிடுமாறு அரசைக் கோருவது ஒரு கேலிக் கூத்தாகும்" என்று இந்த மனுவை விசாரணைக்கு எடுத்த சென்னை நீதிபதி சர்த்தார் சயிட் தெரிவித்தார்.

வழக்கறிஞர் ஆர். கறுப்பன் தாக்கல் செய்த இம்மனுவில்; இலங்கையில் தமிழா படுகொலை செய்யப்படுலதாகவும், அகதிகளாகப் பலர் இந்தியாவுக்கு வந்துள்ளதால், இங்கு பொருளாதாரப் பிரச்னை ஏற்பட்டுள்ளதாகவும். இந்திய மீனவர்களை, இலங்கைக் கடற்படையினர் தாக்கிக் கொள்ளை

(6-ம் பக்கம் பார்க்க)

தீவிரவாதத்தை ஒழிக்க
இராணுவ சட்டம்!

(கொழும்பு)

தீவிரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்காக அவசியமேற்படின் இராணுவச் சட்டத்தைககூட பிரகடனம் செய்ய நான் தயங்கப்போவதில்லை என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

அரசாங்க பாராளுமன்றக் குழுவின் விசேடகூட்டம்நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தொடர்ந்து பேசுகையில்; தீவிரவாதத்தைஒழித்துக்கட்டிய பின்னரே நாட்டில் சமாதானத்தையும், அமைதியையும் நிலைநாட்டுதல் மிகவும் அவசியமென்றும், ஒவ்வொரு பாராளுமன்றஉறுப்பனருக்கும் அவரது தொகுதியில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கான நிறைவேற்று அதிகாரம் கொடுக்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

"நான் மக்களால் இந்த உயர் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டேன் எனவே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களைப் பாதுகாக்கும் கடமையினைக்கொண்டுள்ளார்கள் இதனால் எனது அதிகாரத்தை சம்பந்தப்பட்ட தொகுதிகளின் அங்கத்தவர்களுக்கும் சகல அரசாங்க அதிகாரிகளுக்கும்வழங்க இருக்கின்றேன்" என்று தெரிவித்த ஜனாதிபதி ஜெயவர்த்தனா, இந்த நிறைவேற்றுஅதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்

(6ம் பக்கம் பார்க்க)

"தமிழின ஆக்கிரமிப்பு மீண்டும்தலைதூக்கியுள்ளது!"

சபையில் மத்யூ

(கொழும்பு)

"பண்டைக் காலத்தில் சிங்கள இனம் மீது தமிழினம் ஆக்கிரமிபபுச் செய்துள்ளது தற்போது அந்தச் சகாப்தம் மீண்டும் உதயமாகியுள்ளது. கொக்கிளாய் நாயாறில் சிங்கள இனம் கொல்லப்பட்டது தொடர்பாக அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்தது? இலங்கையில் சுமார் மூன்றிலொரு பகுதி இடத்தில் தற்போது யுத்தம் இடம்பெற்று வருகிறது. பயங்கரவாதம் இப்பொழுது

6ம் பக்கம் பார்க்க)

யாழ். ஆஸ்பத்திரிக்குத் தேவைப்படும்
'காஸ் சிலிண்டர்கள்', மருந்துவகைகள் கப்பல்மூலம் வருகிறது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சைகுப் பயன்படுத்தப்படும் 'காஸ் சிலிண்டர்'களும், சில முக்கிய மருந்து வகைகளும் கொழும்பிலிருந்து கப்பல் மார்க்கமாக யாழ்ப்பாணம் கொண்டுவரப்படவிருக்கிறது.

அநுராதபுரம் சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள போக்குவரத்துச் சீர்குலைவினால் யாழ் ஆஸ்பத்திரிக்கு அவசரமாகத் தேவைப்படும் 'காஸ்

(6-ம் பக்கம் பார்க்க)

வரவளம்பரம்

விற்பனைக்கு

தட்டாதெரு சந்திக்கு 300 யார் தூரத்தில் சகல வசதியுடன் இரண்டு வீடுகளும், ரெயிலர் மொல் சிங்கர் தையல் மெஷினும், ஒட்டுமடம் ஆலடிச் சந்திக்கு அருகாமையில் 8 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. நியூ குகானந்தா பவன் தேனீர்கடை, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். 3409

மினி தியேட்டருக்கும், வீடியோ சென்ரருக்கும் தேவையான சகல சாதனங்களும் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37 (351) மணிக் கூட்டு வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி இல: 22762. 3392

சீயாக்காய், பச்சை அரிசி, பயறு, வெந்தயம் ஆகிய நான்கு சேர்வையிலுள்ள சீயாக்காய் பவுடர் விற்பனைக்குண்டு பெக்கட் 5/50 தொடர்பு கொள்க. M G.M and Stores, 777 காங்கேசன் துறை வீதி and 208 முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611. (2820)

வீட்டுத்தளபாடங்கள், மின் விசிறி, தையல் மெசின் விற்பனைக்குண்டு. C/o விசாகன் கோணமலை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (3387)

மொரிஸ் மைனர் 4 Sri நல்ல நிலையிலுள்ள 27'' Sony Trini Tron கலர் T.V N. V. 2000 நஷனல் வீடியோ Sisil Fridge 8 Cu. Ft. உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். 121A, ரெம்பிள் ரோட், நல்லூர், யாழ்ப்பாணம் 3296

காரைநகர் சயிம்பி வீதியில் 2பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். காரளசிங்கம், 730, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 3415

தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரிக்கு முன்பாக கடை ஒன்று உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிதுரைசிங்கம், அளவையூர் கபே, தெல்லிப்பளை. 3391

சூப்புக்குப் (விருத்துக்கு) பருவமான சேவற்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு ஆனந்த பண்ணை, கட்டுவன்வீதி., மயிலிட்டி. 3427

வீட்டுத் தளபாடங்கள், T V. National 20'', Washing Machine. Table Fan, வீணை, Guitar, மின்சார உபகரணங்கள். சு. துரைசாமி, 71/3, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 3425

T. V. Sony K V 2032 ME 20' Colour காஸ் குக்கர் சிலிண்டர், மின்சாரப் பாவனைப் பொருட்கள் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு; நா. ஸ்ரீதரன், கிருஷ்ண வாசம். புளியடிகாடு பிள்ளையார் கோவில் ஒழுங்கை, ஆனைக்கோட்டை சந்திக்கு அண்மை 3424

யூனிபோ உருக்கு அலுமாரி மேசை, T.V. Stand, ஆபிஸ் கபேட் எமது யூனிபோ கார்சியறை 51, விக்டோரியா வீதி, யர்ழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு. நிலக்கண்ணுடியுடனும் அலுமாரிகள் தற்பொழுது விற்பனையாகின்றன. 3416

வாடகைக்கு

யாழ். கஸ்தூரியார் வீதியில் ஆர்த்தியூவலர்ஸ் முன்பாக உள்ள மாடிக் கட்டிடம் மாத்திரம் வாடகைக்கு உண்டு (ஸ்திரணம் 2000 சதுரஅடி) நேசன் 76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3426

விற்பனைக்கு

21/6 வைமன் வீதியிலுள்ள இரண்டுபரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: 7, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். 3388

SALE

Theodolite Rolling Ruller, Guitar Colcur T. V. 2030 and Antena Gas cooker with Cylinder, Pyrex Dinner Set, Necchi Mechine, Singer Mechine with motor, 403 Car Susuki 125 Asia Cycle 18'' Ladies Drawing Room Suits (imported) Cabinets Etc. 480, Navalar Road. Nallur Cross Road Junction. 3406

மணப்பந்தல்

வெளிநாட்டில் சுயதொழில் புரியும் 40 வயதுடைய யாழ். இந்துவேளாள மணமகனுக்கு, அதே இனத்தைச் சேர்ந்த உயரமான, கல்வித்தராதர முடைய மணமகள் தேவை. அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் முழுவிபரங்களையும். அனுப்பி வைக்கவும் பொருந்தாவிடில் புகைப்படம் அந்தரங்கமாக திருப்பி அனுப்பப்படும். குறிப்பு: 1-6-85க்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 3429, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 3429

தவறிவிட்டது

இல: 272250545V செபஸ்ரி மரியதாஸ், பூட் வீதி, இளவாலை என்பவரது அடையாள அட்டையுடன் இல: 314081 சாரதி லைசன்சும் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் இளவாலைத் திருக்குடும்ப கன்னியர்மடத்தில் அல்லது இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம், பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 3414

அறிவித்தல்

85-ம் ஆண்டு பொதுக்கூட்டம் 26-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும். பெற்றூர்களையும் நலம் விரும்பிகளையும் சமுகந்தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர்,
அமெரிக்கமிஷன் கல்லூரி,
பாடசாலை அ. சபை
உடுப்பிட்டி
3428

ஏல விற்பனவு

மானிப்பாய் 'வசந்தம்' வே. க. இராசலிங்கம் அன்சன் அவர்களிடம் 1-1-1980 தொடக்கம் 30-4-1984 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 18-6 1985 செவ்வாய்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து என்னால் விற்கப்படும்.

கே. இராஜகோபால்
ஏல விற்பனையாளர்.
வண்ணார்பண்ணை. 3379

கேள்விப்பத்திரம்

வெற்றுச் சாக்கு விற்பனை

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தில் 80 0 வெற்றுச் சாக்குகளும், 2500 வெற்றுப் பைகளும் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்குள்ளது. ரூபா 500/- வைப்புப் பணமாக தலைமைக் காரியாலயத்தில் கட்டி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரம் 31-5 85 ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம், பொதுமுகாமையாளர், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மூலையில் வெற்றுச் சாக்குகளுக்கான கேள்விப் பத்திரம் எனக் குறிப்பிடப்படல் வேண்டும் கேள்விப் பத்திரம் 30-5-85ம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்க உபசபையினர் முன்னால் திறக்கப்படும்.

பொது முகாமையாளர்,
தெல்லி. ப. நோ. கூ. சங்கம்.
23-5-85 3432

Tax & Accounting Services

வரி, கணக்குப் பதிவு போன்ற விடயங்களில் தனிப் பெரும்சேவையாற்றிவரும் Tax and Accounting Services நிறுவனம் 22-05-1985 தொடக்கம் இல 37, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும் கட்டிடத்தின் மேல்மாடியில் புதிய நிர்வாகத்தின் கீழ் இயங்கிவருகிறது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம் 3417

மரண அறிவித்தல்

கார்த்திகேசு சிவப்பிரகாசம்

புலோலியை பிறப்பிடமாகக்கொண்ட கார்த்திகேசு சிவப்பிரகாசம் 'முன்னாள் வனபரிபாலன உத்தியோகத்தர்) 23-05-85ல் காலமானார். அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் சிவநாதன் (இலங்கை வங்கி கொழும்பு), டாக்டர் சிவலிங்கம் (யு கே , சிவஞானலிங்கம் (சவூதி), சிறி நடராசா ('ஈசு' கூட்டுத்தாபனம்), திருமதி கமலா வேலாயுதம்பிள்ளை, திருமதி தேவகி மகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. வேலாயுதம்பிள்ளை (டெபியூற்றி டிறக்டர் பிளான்ஸ்), டாக்டர் மகேஸ்வரன் (பொட்ஸ்வானா) ஆகியோரின் அன்பு மாமனுமாவார். இவரின் ஈமக்கிரியைகள் 24-5-85ல் நடைபெற்றது என்பதை உறவினர்க்கும் நண்பர்கட்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
திருமதி சிவஞானலிங்கம்
16/17, விதானைவீதி,
சுண்டிக்குளி. யாழ்ப்பாணம்.
24-05-85 3422

காரியாலய இடமாற்றம்

வி. எம். பேரம்பலம் அன் கோ

(பட்டயக்கணக்காளர்கள்)

எமது காரியாலயம் இல 343, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (இரத்தினம் கட்டிடம், இரண்டாம் மாடி) என்னும் இடத்திற்கு தற்காலிகமாக மாற்றப் பட்டுள்ளது என்பதை வடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகிறோம். 3418

விற்பனையாளர்கள் தேவை

எமது பத்திரிகைகளுக்கு முற்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் கிழ்க்கண்ட இடங்களுக்குத் தேவை.

மந்திகை, மாங்குளம், அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு. அல்லைப்பிட்டி.

விண்ணப்பிக்கவும்:

பொது முகாமையாளர்,
ஈழநாடு லிமிட்,
த. பெ. எண்: 49,
யாழ்ப்பாணம்.
3412

கோப்பாய் லயன்ஸ் கழகம், கோப்பாய்

5-5-85 அன்று நடைபெற்ற சீட்டிழுப்பு முடிவுகள்

1-ம் பரிசு இல. 10206
2-ம் பரிசு இல. 13576 3-ம் பரிசு இல. 4806
4-ம் பரிசு இல, 3731 5ம் பரிசு இல 12142

5 ஆறுதல் பரிசுகளின் இலக்கங்கள்

13503, 12.38, 14432, 12863, 2761

பரிசு பெற்றவர்கள் 235, பழைய தெரு, கோப்பாய் தெற்கிலிருக்கும் எமது காரியாலயத்துடன் பரிசிற்குரிய சீட்டுடனும் தேசிய அடையாள அட்டையுடனும் 31-5-85ம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.

சீட்டிழுப்பில் கலந்துகொண்ட அனைவருக்கும் சீட்டுக்களை விற்பனை செய்வதற்கு உதவிய வர்களுக்கும் பரிசுகளை அன்பளிப்புச்செய்தவர்களுக்கும் எமது மனம் கனிந்த நன்றி.

J. S. S. ஆனந்தம்,
தலைவர்,
லயன்ஸ் கழகம், கோப்பாய்.
23-05-85
3423



31ம் நாள் நினைவஞ்சலி

திரு. நா. அமிர்தலிங்கம்



மலர்வு:
18-7-1927

உதிர்வு:
25-4-1985

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென அணைத்துவிட்ட அன்புத் தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு என்றும் நீங்காது. உங்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள் மாமனார்,
உற்றார், உறவினர்கள்.
3437

மணிவாக்கு

பகையைப் பகை என்று நினைக்காமல் நட்புறவே பாராட்டிவந்தால் பகைவனும் நண்பனாகிவிடுவான்.

— யோக வசிஷ்டம்.

நமது நோக்கு

"வேண்டுமானால் இராணுவச் சட்டம்"

நாட்டில் குடிகொண்டிருப்பது சர்வதேச பயங்கரவாதம்; இங்கு நடைபெறும் வன்முறைச்செயல்கள் இனப்பிரச்னை என்ற அடிப்படையில் இடம்பெறவில்லையென்ற கருத்தை ஜனதிபதி ஜயவர்த்தனா மதப்பிரதிநிதிகள் மத்தியில் வெளியிட்டிருக்கிறார்.

அனுராதபுரத்துக்குப் பின் எழுந்த கருத்துமாற்றம் இதுவென கொள்ள முடியாது; புதிய பாராளுமன்ற அமர்வில் அவர் நிகழ்த்திய உரையும் இந்தப் பாணியில் இருந்ததை நாம் நினைவுகூரவேண்டும்.

நாட்டை எதிர்நோக்கும் யுத்தம் ஒன்றை வெல்ல வேண்டுமானால் மக்கள் ஒன்றுபட்டு நிற்கவேண்டுமென்ற கருத்து அன்றும் வழங்கப்பட்டது.

இன்று யுத்தம் சிங்களப் பகுதிகளின், ஏன் நாட்டின் கலாசார கேந்திர ஸ்தானத்தை உலுப்பிவிட்டதும், மக்கள் மத்தியில் — குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில் சிந்தனைஉணர்வு பெருமளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இதிலிருந்து எங்கு எவ்வாறு பயணம் என்பது ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு பாராளுமன்றம் வழிகாட்டும் என்று நம்புகிறவர்கள் இன்று ஆட்சிமுறையில் ஏற்பட்ட பெரு மாற்றத்தை புரியமுடியாதவர்களே!

'சிட்' (Chit) பாராளுமன்றம் என்ற மாற்றம் மட்டுமல்ல, நிறைவேற்றும் அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சியில், பாராளுமன்றம் மட்டுமல்ல, மக்கள் அபிப்பிராயங்களைப் பிரதிபலிக்கும் எந்த சாதனத்தையும் தவிடுபொடியாக்கும் அதிகாரம் நாட்டின் ஜனாதிபதிக்கு உண்டு.

"மன்னர் தவறு இழைக்க முடியாதென்று' பண்டைய ஆங்கில ஆட்சிமுறையில் சொல்லப்பட்டதுபோல் ஜனாதிபதி எவ்வித தவறுக்கும் ஆளாகமாட்டார் என்ற அடிப்படை இன்றைய ஆட்சி முறையில் ஊடுருவிநிற்கின்றது இந்தியப் பிரதமரைப்போல் இலங்கை ஜனாதிபதியை நாட்டின் நீதிமன்றம் எதுவும் முகமளிக்கவேண்டுமென்று கோரும் அதிகாரம் அற்றது

எனவே இன்றைய பாரதூரமான யுத்தநிலை நாட்டில் இருப்பதாக முடிவு செய்தால், இனப்பிரச்னை அல்ல வேறெந்தப்பிரச்னைக்கும் பேச்சுவார்த்தைக்கு இடமளிக்க மறுப்பது வியப்பல்ல

ஒருபக்கம் பயங்கரவாதம் மறுபக்கம் அரசாங்கம் என்று திட்டவட்டமாக விளக்கிய ஜனாதிபதி நாட்டு மக்கள் தமிழர் உட்பட அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புநல்கவேண்டுமென்று சொல்கின்றார்.

தமிழர் பிரச்னைக்கும் இன்றைய பயங்கரவாதத்துக்கும் தொடர்பிருந்தாலும் நாட்டை அச்சுறுத்துவது சர்வதேச பயங்கரவாதம் என்பது அவருடைய வாதம். இந்த ஒத்துழைப்பில் தமிழ் மக்கள் தாமும் சேரவேண்டுமென்பது அவர் சொல்லாமற் சொல்லும் புதுக்கருத்து.

புதுக்கருத்தாகினும் அது பழைய பல்லவி என்பதை ஜனாதிபதி ஆட்சிமுறையை கூர்ந்து கவனித்தவர்கள் புரியமுடியும்.

அதிகாரத்திறமையால் எந்த எதிர்ப்பையும் முறியடிக்கலாம், அடக்குமுறைகளால் எதனையும் வெல்லலாம், பிரிக்காள்கையால் போன வழியில் போகலாம்" என்ற சித்தாந்தம் ஐ. தே. கட்சி ஆட்சியில் என்றும் இருந்தது. இன்று அதன் வடிவமும் மாறி வாகத் தெரிகிறது.

ஐக்கியதேசியக் கட்சிக்கு உண்டான ஆபத்தை இரண்டு தடவை தணித்து அதனை ஸ்திரமான ஸ்தாபனக்கட்சியாகப் புனரமைத்த திரு. ஜெயவர்த்தனாவிற்கு அது பலவீனப்படுவதும் அதிகாரம் இழப்பதும் எவ்வாறிருக்குமென்பதை எவரும் கற்பனை செய்யமுடியும்.

எனவே இந்தப் போர்முனையில் ஏற்படக்கூடிய அபாயத்தை எதனையும் சமாளிக்க முயல்வாரென்பது ஒரு தலை. கட்சியில் உள்ளவர் எவரும் அதற்கு மாறுபடமாட்டாரென்பதும் அவர் நன்கறிந்ததே.

ஒரு இனத்தின் சுயாட்சி அலை; தேசம் அனைத்தையும் கைப்பற்றி ஒரு மார்க்சிய ஆட்சியை நிறுவ முயன்றால் அதனை மக்கள் அனைவரும் எதிர்த்துப் போராட முன்வர வேண்டுமென்று கேட்பதில் தவறென்ன?

அவ்வித ஆட்சி, சர்வாதிகார ஆட்சியாகவிருக்கும் என்று சொல்வது தான் சிரிக்கஇடமளிக்கிறது இன்று நடைபெறுவது மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஆட்சியென்று காதுபுளிக்க ஜனாதிபதி பாடம்பண்ணி வருகிறார்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி சர்வாதிகாரியாக மாறலாம் என்பது இன்று மக்கள் அறியக்கூடிய உண்மை.

வேண்டுமானால் ராணுவச்சட்டம் - Martial Law - கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டதால், இன்று நடைபெறும் அவசரகாலச் சட்டம் வேறென்பது கருத்து.

அன்னியர் ஆட்சியில் இவ்வித சட்டம் அமுலிலிருந்தது தேசபிதா என்று சொல்லப்படும் ஐ. தே. கட்சியின் முதற்தலைவர் டி. எஸ். மறியலில் வைக்கப்பட்டார்.

சுதந்திர இலங்கையில் ராணுவச்சட்ட ஆட்சியென்றால் பாகிஸ்தானில் எடுத்து வருடம் நடைபெற்ற ராணுவத்தளபதி ஐயாவின் ஆட்சி போலிருக்கும்; அது வருமானால் இலகுவில் போகாது.

அண்மையில் பாகிஸ்தான் சென்ற ஜனாதிபதி அவ்வித ஆட்சியின் சிறப்பை நேரில் கண்டிருப்பதால் அதில் நம்பிக்கை கொள்ள நியாயமுண்டு. இலங்கை வேறு; பாகிஸ்தான் வேறு என்பதே இன்றைய நிலைமையில் இந்நாட்டு மக்களுக்குத் தென்படுகின்றது.

இன்று சேக்கிழார் குருபூசை

சேக்கிழார் செய்த வீரகாவியம்

கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலே தமிழ்நாட்டிலே நடைபெற்ற நிகழ்வுகளைச்சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கூறிநிற்க, அதன் பின் தமிழ் நாட்டிலே பெரிய, பாரியமாறுதல்கள் ஏற்பட்டன. 'வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்' என்று நிலையாமையைப் போதித்து, வீடு பேறு அடைவதற்கு மிக வருந்தி முயலவேண்டும் என்று கூறும் சமண, பௌத்த மதங்கள் கிளைவிட்டுப் பரவி ஆட்சிசெய்யத்தொடங்கின. பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய சீவக சிந்தாமணி என்ற சமண காவியத்தில் அதிக ஈடுபாடுகொண்டிருந்த இரண்டாம் குலோத்துங்க சோழனின் முதன் மந்திரியாய் இருந்தார் சேக்கிழார் இந்த இடைக்காலத்தில் சமண பௌத்தக் கோட்பாடுகளுக்கு எதிராய் பக்தி இயக்கமும் இங்கு தோன்றி வளர்ந்து வந்திருந்தது. இந்தப் பக்தி இயக்கத்தை வளர்த்த இறையடியார்களின் வரலாறு மக்களுக்கும் அரசனுக்கும் இறைபக்தியின் பண்பினையும் பயனையும் எடுத்துக்கூறவல்லது என்பதை நம்பிய சேக்கிழார் அந்த வீர நாயகர்களின் வரலாறுகளைத் தொடுத்து ஒரு காவிய மாக்கினார். பன்னிரண்டாம் நூற்றாண்டிலே இந்த நூலின் தோற்றம் பக்தி மார்க்க வளர்ச்சியிலே ஒரு மைல் கல்லாக அமைந்தது இதை ஒரு பக்திக் காவியமாக்கிய போதிலும், இது ஒரு வீர காவியமும்கூட என்று சொல்வது மிகவும் பொருத்தமானதே

தமது கதா பாத்திரங்களைப் பற்றிக் கூறும் சேக்கிழார் "ஈர அன்பினீர் யாதும் குறைவிலார்-வீரம் என்னுள் விளம்பும் தகையதோ?" என்கிறார். தமது நாயன்மார் அனைவரையும் 'வீரத்தார்' என்றே அவர் குறிப்பிடுவார் போருக்குச் சென்று எதிரியை வெட்டி வீழ்த்தல் மட்டுந்தான் வீரமா?

கோகிலா மகேந்திரன்

எவராலும் வெல்லமுடியாத காமத்தை வென்ற திருநீலகண்டர் ஒரு வீரர். இல்லை என்று வந்த அடியார்க்கெல்லாம் தன்னிடம் இல்லாத நிலையிலும் இல்லை என்னாது நல்கும் வீரர் இளையான்குடி தம்முடைய மனைவியாரைச் சிவனடியார்க்குக் கொடுத்து அதனை எதிர்த்துப் போரிட வந்த எல்லோருடனும் பொருது வென்றார் இயற்பகை என்ற பொருதிறல் வீரர். தம்மை வஞ்சகத்தால் கொல்ல வந்த முத்திநாதனையும் 'மெய்த்தல வேடமே மெய்ப்பொருள்' எனத் தொழுது வென்றார் மெய்ப்பொருள் நாயனார். இது அரசவாகை. சிவகாமி ஆண்டாரின் பூக்குடலையைச் சிதறிய மதயானையை அதன் தடக்கை வீழத் தன் மழுவினால் துணித்தவர் எறிபத்தர். கண்ணப்பர் கண் துயிலாத அன்புக்குப் பொருள் சொன்ன வீரர். எனாதிநாதர் வாட்படை பயிற்றும் வீரர். விறன் மிண்டர் பெயரிலேயே வீரம் கொண்டவர். இறைவனைப் பரவையார் பால் தூது அனுப்பினாரென்று சுந்தரரைக் காண விரும்பாமல் தன் உயிரையே மாய்த்த வீரர் ஏயர் கோன் கலிக்காமர்.

இந்தச் சுந்தரரே பெரிய புராணத்தின் காவிய நாயகர். இவரது வரலாற்றைத் தடுத்தாட்கொண்ட புராணமாகத் தொடங்கி, இடையில் இரண்டு பகுதியைக்கூறி கடைசியில் வெள்ளையானை சருக்கத்திலே அவர் வரலாற்றைக்கூறி முடிக்கிறார் சேக்கிழார். இடையிலே ஏனைய நாயன்மார்களது கதைகள் பேசப்படுகின்றன. இந்த உத்திமுறை இன்றைய இலக்கியத்திலே பேசப்படும் நனவோடை உத்திமுறை போல அமைந்து இக் காவியத்தை அழகு பொதிந்த வீர காவியமாக்கிறது. வீரர்களாக நாம் ஒவ்வொருவரும் மாறவேண்டி இருக்கும். இன்றைய காலகட்டத்தில் பெரியபுராணம் போன்றதொரு வீர காவியத்தைப் படிப்பதும் சேக்கிழார் போன்ற ஒரு வீரத்தலைவரை நினைவு கொள்வதும் மிகப் பொருத்தமானவையே!

இலங்கையின் மூத்த அரசியல் ஞானிகளில் ஒருவர்

வைத்திலிங்கம் மாஸ்டரின் வாழ்க்கை சிறப்பு

வேலைப்பொறுப் பாளராகக் கடமையாற்றியவர்

இலங்கையில் பொதுவுடமை இயக்க வரலாற்றில் மிக முக்கியமான இடம்வகிக்கும் தாபன அங்கத்தவர்களில் ஒருவரான அ. வைத்திலிங்கம் அவர்களுக்கு இந்தச் சனிக்கிழமையன்று எழுபது வயதாகின்றது. "வைத்தி", "வைத்தி மாஸ்டர்" என்றும் அழைக்கப்படும் இந்தச் சர்வதேசியத் தோழமைவாதியின் வாழ்க்கை வரலாறு, தியாகத்திற்கான பாடப்புத்தகமாகவும், படோபமற்ற அர்ப்பணிப்புக்கு ஓர் உதாரணமாகவும், அறிவாரத்தின் எல்லைக் கல்லாகவும் அமைவது.

வைத்திலிங்கம் அவர்கள் இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி (1943)யினதும், அதற்கு முன்னோடியான யூனைட்டெட் சோஷலிஸ்ற் பார்ட்டி (1940) யினதும் தாபன அங்கத்தவர்களில் ஒருவராவார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் 1936—1939 வரை கற்றுக் கணிதப்பட்டதாரியாக இலங்கை மீண்ட வைத்திலிங்கம், 1951 வரை ஆட்சியின் முழுநேர ஊழியராக கட்சியின் தொழிற்சங்க வைத்திய கடமையாற்றி வந்தார். 1941—1951). ஆற்பது களில் நடந்த தொழிலாளர் போராட்டங்களை ஒழுங்கமைத்து நடத்திய முக்கியஸ்தர்களில் வைத்தியும் ஒருவர்.

இலங்கைத் தொழிற்சங்க வரலாற்றில், கைத்தொழிலின் அடிப்படையில், ஒரு கைத் தொழிலில் ஈடுபட்ட அத்தனைபேரையும் ஒரு தொழிற் சங்கத்தில் ஈடுபடுத்தும் நடைமுறையை முதன்முதலிற் கொண்டுவந்தவர் வைத்திலிங்கமே என, இலங்கை தொழிற்சங்க வரலாற்றின் மிகச் சிறந்த வரலாற்றுசிரியரான பீட்டர் கெனமன், காலஞ்சென்ற பொன்னம்பலம் சந்தையா ஆகியோருடன் ஒருகாலே மாணவனுக்கே பிறிட்ஜில் கற்ற வைத்தி, தனது பல்கலைக்கழககாலத்தில் கிருஷ்ணமேனனின் நண்பர்களில் ஒருவர். அக்காலத்தில் இங்கிலாந்தில் கடமையாற்றிய டாக்டர் எஸ் ஏ. விக்கிரமசிங்கவுடன்தொடர்புகொண்டு மார்க்சிய இயக்கப்பணியில் ஈடுபட்டவர். வைத்தி மூலமாகவே கெனமன் விக்கிரமசிங்காவைச் சந்தித்தார். கந்தையா, விக்கிரமசிங்க, கெனமன், வைத்திலிங்கத்தின் அரசியலிணைப்பு இலங்கையின் வரலாற்றின் போற்றிப் புகழப்படும் ஒன்றாகும்.

கேம்பிரிட்ஜ் பட்டத்தையும் பாரம்பரியச் செல்வாக்கையும் தனது உத்தியோக மேன்மைகளுக்கும், தனிப்பட்ட உயர்வுகளுக்கும் பயன்படுத்தாது, இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் (சி. ரி. யு. எப்) பின்புறப் பொறுப்பாளராகக் கருதப்படும் பேராசிரியை குமாரி ஜயவர்த்தன கூறுவார்.

(5-ம் பக்கம் பார்க்க)

—பேராசிரியர் கா சிவத்தம்பி

நம்மான் சிந்தனை

எப்பெண்ணும் கணவனுக்கு மாறு செய்வாளென்று நீங்கள் அஞ்சினால் அவளுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள் திருந்தாவிடில்) படுக்கையிலிருந்து அவளை அப்புறப்படுத்தி வையுங்கள். அதிலும் அவள் சீர்திருந்தாவிடில்) அவளை அடியுங்கள். அதனால் அவள் உங்களுக்கு வழிப்பட்டுவிட்டால் அவளை (அநியாயமாகத் தண்டிக்க) வழிதேடாதீர்கள்.

(— அல்குர்ஆன் 4:34)

நோன்பு துறக்கும் நேரம் (மஃரிப்) 6-21.

நோன்பு ஆரம்பிக்கும் நேரம் [ஸஹர் முடிவு] 4-18.

—ஜனூபா நிஹானா ஜவ்பர்

பெய்ரூட் நகரில் நான்காவது நாளாக கடும் சண்டை!

பாலஸ்தீன அகதிகள் முகாம்களில் முற்றுகை

பெய்ரூட், மே 24

ஸியா முஸ்லீம் மக்கள் படைக்கும், பாலஸ்தீனியருக்குமிடையில் தொடர்ந்து நான்காவது நாளாக கடும்சண்டை நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது.

மூன்றுநாள் கடும் சண்டைக்குப்பின்னர், சாபா, சட்டிலா ஆகிய பகுதிகளிலுள்ள மூன்று பாலஸ்தீன அகதி முகாம்களில் இரண்டை தமது வசப்படுத்தியுள்ளதாக ஸியா மக்கள் படையினர் அறிவித்துள்ளதுடன், மூன்றாவது முகாமில் பாலஸ்தீனியருக்கும் மக்கள் படையினருக்குமிடையில் கடும் பீரங்கி சண்டை நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இஸ்ரேலுக்கு ஆதரவான கிறிஸ்தவபடையினர் தெற்கு லெபனானில் நான்கு லெபனான் துருப்புக்களை கொன்றுள்ளனர்.

இதேவேளை பாலஸ்தீன விடுதலை இயக்கம் விடுத்துள்ள தனது அறிக்கையொன்றில் பெய்ரூட்டுக்கு திரும்பிசெல்லும் எண்ணம் தமக்கு இல்லையென்றும், பெய்ரூட்டுக்கு அருகில் உள்ள முகாம் அகதிகளை பாதுகாப்பது தமது கடமையென்றும் தெரிவித்துள்ளது. (ரா)

இயற்கை வளங்கள் ஆய்வு:

புதிய செயற்கைக்கோளை சோவியத் அனுப்புகிறது

(மாஸ்கோ)

இயற்கைவளங்கள் பற்றி ஆராய்ந்து கண்டுபிடிப்புகளை செய்வதற்கென 'பாஸ்மாகக்-1653' என்னும் புதிய செயற்கைக்கோளை சோவியத்யூனியன் விண்வெளிக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த செயற்கைக்கோள் சோவியத்யூனியனின் தேசிய பொருளாதாரத்தையும் சர்வதேச ஒத்துழைப்புக்களையும் ஊக்குவிக்குமென்று 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் கூறியது.

இதேவேளை அமெரிக்க சட்டில்களம் டிஸ்கவரில் அடுத்த மாத தமது பயணத்தின் போது அதிபர் றீகனின் 'நட்சத்திரப் போரின்' ஒரு பகுதியாக லேசர் கதிர்வீச்சை சோதித்துப் பார்க்கும் என்றும், ஹவாய்க்கு அருகிலுள்ள ஒரு இலக்கின்மீது அந்தக்களம் லேசர் கதிரைதாக்கும் என்றும் அமெரிக்க பாதுகாப்புஇலாகா அறிவித்துள்ளது. [ரா]

இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணம் நோக்கி பஸ்ஸில் பிரயாணம்செய்த பெண்மணி ஒருவர் ஓரிடத்தில் சோதனைக்குள்ளானபோது, அவரது கைப்பையும் பரிசோதனைக்குள்ளானது.

சில நிமிட நேரத்தில் கைப்பை அப்பெண்ணிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டதும் அந்தப் பெண் 'ஓ' என்று ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டார்! காரணம்; அதற்குள்ளிருந்த சுளை சுளையான 'தாள்கள்' மறைந்துவிட்டன!

சத்தம் கேட்டு, பொறுப்பதிகாரி ஒருவர் அந்தப் பெண்ணிடம் வந்தார். விசாரித்தார். உடனடியாக ஸ்தல விசாரணை ஆரம்பமாகி அடையாள அணிவகுப்பும் நடந்தது!

கடமையிலிருந்த குறிப்பிட்ட ஒருநபரின் சட்டைப் பைக்குள் கையைவைத்து அந்தத் 'தாள்களை' அப்படியே அந்தப் பெண்ணிடம் அள்ளிக்கொடுத்தார் அந்த நல்ல உயர் அதிகாரி!

கையெடுத்துக் கும்பிட்டு, 'தாள்களை'ப் பெற்றுக் கொண்ட அந்தப் பெண், வீடுபோய்ச் சேர்ந்ததும்தான் எண்ணிப்பார்த்தார்.

என்ன ஆச்சரியம்! முதலில் கைமாறியது நாலாயிரம். பின்னர் கைக்குத்திரும்பியது ஏழாயிரம்! இடையில் வந்த மூவாயிரம்.....? யார் வயிறு எரிந்ததோ!

'ஊடுருவி'

இன்றைய பலன்

வைகாசி-12 (1985-5-25) சனி
திதி: பஞ்சமி காலை 5 57ன்

மேல் ஷஷ்டி
நக்ஷத்திரம்: பூசம்பிற்பகல் வரை.

மேடம்: கடமை புரியும் இடத்தில்கண்டிப்புக்கு ஆளாக நேரும் கருத்து வேற்றுமைகளுக்கும் இடமேற்படும் கயவர்களின் பார்வையுமுண்டு.

இடபம்: நிதி நிலையில் முடக்கத்திற்கு இடமுண்டு. கொடுக்கல் வாங்கல் பிணக்குமுண்டு இன்று ஒப்பமிடுதலில் கவனம் நன்று

மிதுனம்: எண்ணம் போல் எதுவும் நடைபெறமாட்டாது உங்கள் விடயங்களில் பிறர் தலையீடு தவிர்க்கப்படல் வேண்டும்

கடகம்: இனத்தவர்களாலே இடர்கள் பல தாக்கும் இல்லத்திலும் பொல்லாப்பு கேட்க நேரும் இன்று முன்னெச்சரிக்கை நன்று.

சிங்கம்: ஏமாற்றத்திற்கு இடமுண்டு திட்டமிட்ட விடயத்தை இன்று பின்போடவும் நண்பராலே எதிர்பாராத வரவுமுண்டு.

கன்னி: குடும்பத்தில்கவலை தோன்றும் சகோதரர் விடயமும் சஞ்சலம் தரும் உண்மையும் இன்று ஊமையாகிவிடும்.

துலாம்: மாதுருவழி பெருமைக்கு இடமுண்டு காரிய அலைச்சலுக்கும் இடமுண்டு வாகனச் சாரதிகள் அவதானம் நன்று.

விருச்சிகம்: வித்தையில் விபரீதம் விளையக்கூடும் விசுவாசத்தால் முயற்சியும் கைகூடும். புத்திரர்நிலை போற்றத்தக்க முன்னேற்றமடையும்.

தனுசு: பிரயாணத்தின் போது பொருள் தவறக்கூடும் கூடஇருந்தவரே குழிதோண்டப்பாப்பர் எவ்விடயத்திலும் இன்று நிதானம் வேண்டும்.

மகரம்: வாழ்க்கையில் வளமான திருப்பம் ஏற்படும் பிரிந்தவர்கள் வாழ்வில் மீண்டும் இணைவர் தொழிலிலும் சோர்வு தென்படும்

கும்பம்: அன்னிய நபர் ஒருவரால் ஏமாற்றமடையக் கூடும், கொடுக்கல் வாங்கலிலும் பேச்சுவார்த்தையிலும் அவதானம் வேண்டும்.

மீனம்: பிதாவழி சுகத்துடன் பெரியோர் உதவியுமுண்டு. தெய்வ வழிபாடு சிறப்புத்தரும்.

திருமலை
வே. ரவீந்திரன்

தீவுப்பகுதி மக்கள் பீதி

(வண்ணார்பண்ணை)

அண்மையில் நெடுந்தீவு நயினாதீவுப் பகுதிகளில் நடந்த அசம்பாவிதங்கள், கொலைகள் தீவுப்பகுதி மக்களை பீதி கொள்ளச் செய்துள்ளன இச்சம்பவங்களைத் தொடர்ந்து கடற்கரை ஓரங்களில் தினமும் கேட்கும் குண்டுச் சத்தங்களால் பீதிகொண்ட மக்கள் பலர் வேறு கிராமங்களுக்கு மூட்டை முடிச்சுக்களுடனும் கைக்குழந்தைகளுடம் வெளியேறி வருகின்றனர். நெடுந்தீவு நயினாதீவுப் பகுதியைச் சேர்ந்த சில குடும்பங்கள் சென்றவாரம் அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பகுதிகளுக்கு வந்து சேர்ந்தனர்

சிறிய படகுகள்மூலம் வந்த இவர்கள் தமக்குத் தெரிந்தவர்களது வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். (கி

சோவியத்-இந்திய உறவுகள் மேலும் வலுவடையும்

பிரதமர் ரஜீவ் நம்பிக்கை

(மாஸ்கோ)

இந்தியாவுக்கும், சோவியத்யூனியனுக்குமிடையிலான உறவை மேலும் வலுப்படுத்தவும், உறுதிப்படுத்தவும் மாஸ்கோவில் கைச்சாத்தான பல ஒப்பந்தங்கள் துணைபுரியும் என்று இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பைலோ ரஷ்யாவின் தலைவர்களுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போதே பிரதமர் ரஜீவ் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியா, சோவியத்யூனியன் ஆகிய இரு நாடுகளுக்கிடையே வழி வழியாக வரும் நல்லுறவுகள் இருநாட்டு மக்களின் நலன்களுக்காக மட்டுமன்றி, உலக சமாதானத்துக்கும், சர்வதேச பந்தோபஸ்துக்கும் உதவும் வகையில் வளம் பெறும் என்றும் திரு. ரஜீவ் காந்தி அங்கு தெரிவித்தார். (ரா)

தொழிலதிபர் இராசரத்தினத்தை

விடுவிக்கும்படி வேண்டுகோள்!

(யாழ்ப்பாணம்)

''தொழில் இழந்தவர்களின் குடும்பங்கள் தொடர்ந்து வாழவும் ஏனைய சமூகப்பணிகள் தொடர்ந்து நடைபெறவும் தமிழ் ஈழத்தின் உயர்வுக்காக உழைக்கும் இயக்கங்கள் உடனடியாகத் தலையிட்டு 'தொழிலதிபர்' எஸ். இராசரத்தினத்தை நிபந்தனை எதுவுமின்றி மனிதபிமான அடிப்படையில் விடுவிக்கவேண்டும்.

புன்னாலைக்கட்டுவன் பிரஜைகள் வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

''தமிழ் பகுதிகளில் கைத்தொழில்களைத் தொடக்கி அதனூடாக நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலைவாய்ப்புகள் அளித்தும், பல பாடசாலைகளுக்கும் கோவில்களுக்கும் சமூக சேவை ஸ்தாபனங்களுக்கும் காலமறிந்து பெரும் உதவிகளைச் செய்தும் தமிழ் ஈழ மக்கள் பலமுறை தம் மண்ணிற்கு அகதிகளாக வந்த போதெல்லாம் முன்னின்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்த திரு. எஸ். இராசரத்தினம் அவர்களைக் கடத்திச் சென்றமை இப்பகுதி மக்கள் எல்லோரையும் அதிர்ச்சிக்கும் வேதனைக்கு முள்ளாக்கியுள்ளது.

தற்பொழுது அன்னாரின் தொழில் நிலையங்களில் வேலை செய்தவர்களின் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வருவாய் இன்றி வாழ முடியாது தவிர்க்கின்றார்கள்.

திரு. இராசரத்தினத்தின் கடத்தல் பொன் வாத்தைக் கொன்ற கதையாக முடியக் கூடாது.'' (மா)

குடும்பத்திட்ட கருத்தரங்கு

(சாவகச்சேரி)

இலங்கை குடும்பத் திட்ட சங்கத்தின் கருத்தரங்கு கடந்த வாரம் கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மகளிர் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

கைதடிக் கிராமத்தில் சிறு பிள்ளைகளின் போஷாக்கு, சுகாதாரம், மற்றும் பல புள்ளி விபரங்களைத் திரட்டி தேவையான அடிப்படை உதவிகளைச் இவர்களுக்குச் செய்ய விருப்பதாக தெரிய வருகின்றது.

மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைக்களில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு
''மேற்கு ஜெர்மனி 'BASF'' தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 18/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

M LIMITED மக்வுட்ஸ் ஸ்தாபனம்
2 ஞானார்த்தபிரதீப மாவத்தை, த.பெ.இல-9
(முன்னாள் மருதானைரோட்) கொழும்பு - 8
தொலைபேசி; 597965——9

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-00
கமலஹாசன் - ஜெயபிரதா
மஞ்சுபார்கவி
சலங்கை ஒலி
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின்
மிகச்சிறந்த படம்

லிடோ சினிமா
சுதாகர் - ராதிகா
நடித்த
ஆயிரம் வாசல்
இதயம்
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
பாக்கியராஜ் - சரிதா
நடித்த
மௌன கீதங்கள்
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி

ஹரன் சினிமா
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல்
சாட்சியளித்த வெற்றிச்
சித்திரம்
மோகன் - பூர்ணிமா
விதி
(கலர்)

ஆனந்தி
வீடியோ சினிமா
[மனோகராவில்]
தினசரி 10-30, 2-30
எம். ஜி. ஆர். - மஞ்சுளா
லட்சுமி நடித்த
இதயவீணை
(கலர்)

மொடேர்ண்
மினி சினிமா
[ஸ்ரீலங்கா அச்சக லேன்
ராஜா தியேட்டருக்கு
அருகாமையில்)
BLACK
EMMANUEL
பிளாக் எம்மானுவல்
கருத்தோட்டமுள்ள
விறுவிறுப்பான காட்சி
களுடன், புத்தம் புதிய
படப்பிரதியில் தெளி
வாகக் காண்பிக்கப்படு
கின்றது,
ரசிகப் பெருமக்களின்
வேண்டுகோளுக்கிணங்க
24-5-85 தொடக்கம்
தினசரி 1 30 மணிக்
காட்சி மட்டும்
மதுரை சூரன்
தமிழ்ப் படம்
காண்பிக்கப்படும்

வின்ஸர்
தினசரி 10-30, 2-30
ஜேம்ஸ் பொண்ட் சித்திரம்
எம் ஜி ஆர்.-ஜெயலலிதா
அசோகன், - நாகேஷ்
ஆனந்தன்
நடித்த
தனிப் பிறவி
(புதிய கொப்பி)

யாழ். வின்ஸர் மினி
தினசரி: 10-30, 2-30
கார்த்திக்
அம்பிகா (இருவேடம்)
மேஜர் சுந்தரராஜன்
ராதாரவி. S S. சந்திரன்
S. V. சேகர், வனிதா
நடித்த
பேய் வீடு
பயங்கரக் காட்சிகள்
கொண்டது.

பாதுகாப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலை ஏற்படும்வரை பாடசாலைகளை மூடிவிடும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ் செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

யாழ். பெற்றோர் சங்கச்செயலாளர்சட்டத்தரணி சி.பொன்னையா ''வடபகுதி மாணவர் பாதுகாப்பு'' என்ற தலைப்பிலான மகஜர் ஒன்றையும் ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பதற்காக அரசாங்க அதிபரிடம் கையளித்தார். அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''கடந்த மூன்று கிழமைகளாக ஆயுதப்படையினர் நடத்திய கொடுமைகள் தமிழ் மக்களுக்குப் பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணியுள்ளது. வடமராட்சிப் பகுதியிலுள்ள வல்வெட்டி, வல்வெட்டித்துறை, கரணவாய், உடுப்பிட்டி, கம்பர்மலை, கெருடாவில் முதலிய இடங்களில் வீடுகளில் நுழைந்து 12 முதல் 30 வயது வரையிலான தமிழ் இளைஞர்களை கொண்டுபோய் சுடுகாட்டு மடத்திலும், வாசிகசாலைகளிலும் அடைத்து வைத்து சக்திவாய்ந்த குண்டுகளை எறிந்து அவர்களை என்றும் நாம் அறியாத வகையில் கொன்றுள்ளனர். இவ்விதம் மொத்தம் சுமார் 110 இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

''சென்றகிழமை 'குமுதினி' என்னும் படகில் சென்ற தமிழ் மக்கள் வாள், கோடரி, இரும்புச்சிலாகைகளால் நயினாதீவில் தாக்கப்பட்டுள்ளனர். அதில் 35 தமிழர்கள் இறந்துள்ளனர். இச்சம்பவங்களினால் மாணவர்கள் பாடசாலைபோக மறுத்துவருகிறார்கள்; பெற்றோர் அவர்களை அனுப்பிவைக்கப்பயப்படுகிறார்கள் பாடசாலைகளில் பெருமளவில்மாணவர் வரவுத் தொகை குறைந்துள்ளது.'' (மா)

மணிவிழா

[யாழ்ப்பாணம்]

கீரிமலை நகுலேஸ்வரம் ஆதீனகர்த்தாவும் சிவநெறிக் கழகத் தலைவருமாகிய சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்களின் மணிவிழா இன்று கீரிமலை நகுலேஸ்வரர் கோவிலில் நடைபெறவுள்ளது.

பண்டிதர் இ. நவசிவாயம் தலைமையில் நடைபெறும் பாராட்டுவிழாவில் திருவாளர்கள்; நா சுப்பிரமணியம், ச. விநாயகமூர்த்தி, சி கந்தசாமி ஆகியோர் பாராட்டுரை வழங்கவுள்ளனர். சிவநெறிக் கழகம் சார்பில் பண்டிதர் இ. நமசிவாயம் பாராட்டுப் பாமலர் வழங்குவார்.

இன்று சேக்கிழார் விழா

[வண்ணார்பண்ணை]

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று சனிக்கிழமை சேக்கிழார் தினம் கொண்டாடப்படுகிறது. யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தொண்டர் பிரிவினால் நடத்தப்படும் இவ் வைபவம் காலை முதல் நண்பகல் வரை நடைபெறும். மேற்படி ஆதீன சேக்கிழார் மன்றம் இதற்கான உதவிகளைச் செய்துள்ளது

அபிஷேகம், பூசை, புராணப்படிப்பு, சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

★

வைத்திலிங்கம் 70–வது பிறந்ததினவிழா

[யாழ்ப்பாணம்]

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும், கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும், பிரபல தொழிற்சங்கவாதியுமாகிய திரு. அ. வைத்திலிங்கத்தின் 70 வது பிறந்ததினவிழா இன்று சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு யாழ் நகரிலுள்ள ஹோட்டல் ஞானம்ஸ்-ல் நடைபெறும்.

இந் நன்நாளில் தமிழ் மக்களை எதிர்நோக்கும் பிரச்னைகள் என்ற கருத்துபரிமாறலும் இடம்பெறும்.

பல முக்கிய பிரமுகர்கள் இதில் கலந்து கொள்வார்கள்

லதா மினி
(கோண்டாவில்)
காலை 10-30 மாலை 3-30
ரஜனிகாந்த் - அம்பிகா
பாக்கியராஜ்
நான் சிவப்பு மனிதன்

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
10-30 2-00 4-30
DRACULA
ரகுலா
(கண்டிப்பாக வயது
வந்தவர்க்கு மட்டும்)

STANLEY MINI
10-15, 2-00, 4-15
Bruce Lee
நடித்த
Enter The
Drageon
(Karate Film)

இலங்கையின்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணத்தைவந்தடைந்த வைத்தி (1951), பாடசாலை ஆசிரியராகி அதிபராக உயர்வு பெற்றார். உரும்பராய் இந்துக் கல்லூரியின் அதிபராக (1958—1970)ல் கடமையாற்றி விட்டு 1970இல் மீண்டும் கட்சிக் கடமைகளுக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் தொழிற் சங்கங்களில் முன்னின்றுழைத்த இவர், வடமாகாண ஆசிரியர் சங்கத் தலைவராகவும் அகில இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவராகவும் கடமையாற்றி தனது பதவிக்காலங்களில் ஆசிரியர் சமூகத்துக்குப் பல தொழிற் சங்க மேன்மைகளை ஈட்டியவர்.

வைத்தி இன்று இலங்கையின் மூத்த அரசியல் ஞானிகளில் ஒருவராகப் போற்றப்படுகிறார். சித்தாரித்தத் தெளிவும், உத்திநுணுக்கமும், சலிக்காத உள்ளமும் வைத்தியை இலங்கையின் முக்கிய பொதுவுடமைச் சிந்தனையாளர்களில் ஒருவராக்கியுள்ளது.

இத்துணைச் சிறந்த கம்யூனிசப் புலமையாளன், தனது கட்சித் தோழர்களின் மதிப்பு மிகுந்த நண்பனாக, சுகபோராளியாக விளங்குபவர்.

வைத்தியிடம் நான் காணும் மிகச் சிறந்த பண்புகள் இரண்டு-

முதலாவது தான் பேசத் தொடங்குவதற்கு முன்னர் கேட்கவேண்டிய அத்தனையையும், அத்தனை பேரையும் அவதானிப்புடன் கேட்டுக் கொள்ளல்.

இரண்டாவது, தனது இயக்கத்திலிள்ள சகதோழர்களிலும் பார்க்க தனக்கு எந்தவித உயர் நிலையையும் எதிர்பார்க்காதிருத்தல்.

இந்த இரண்டு பண்புகள் காரணமாகவும் வைத்தி தலைவர்கள் தேடிப் புத்திமதி கோரும் புலமை ாளனாக விளங்குகிறார்

இலங்கையில் இத்தகையோர் மிகக் குறைவு யாழ்ப்பாணம் சமூக அமைப்பில் இத்தகைய ஒருவர் இருப்பது அபூர்வம் வைத்தி அத்தகைய அபூர்வமானவர்

கம்யூனிசத்தை தனது வாழ்க்கைச் சித்தாந்தமாக விரித்துக் கொண்ட வைத்தியின் வாழ்க்கை எளிமை, கண்ணியம், கட்டுப்பாடு, தெளிவு ஆகியனவற்றின் சலங்கரைவிளக்கமாக அமைவது

வைத்திலிங்கம் அவர்கள் பல்லாண்டு காலம்வாழ எமது வாழ்த்துக்கள்.

வாகனச்
சொந்தக்காரர்களுக்கு

பண்டத்தரிப்பில் புதிதாக நிறுவப்பட்ட குயிக் சேவிசஸ் ஸ்தாபனத்தில் அனுபவம் மிகுந்த பணியாளர்கள் உங்கள் வாகனங்களை மிகத்திறமாகவும் உடனடியாகவும் சேவிஸ் செய்து தருகிறார்கள்.

Quick Services
JUNCTION PANDATERUPPU
3433

வெளிநாட்டுப்
பயணங்கள்
மீண்டும் வழமைபோல்!

லண்டன், பெர்லின் மற்றும் உலகின் எப்பகுதிக்காயினும் செல்ல விரும்புவோர் தொடர்பு கொள்க. உடனே பிரயாணம் செய்யத்தக்கதாக ஒழுங்குகள் செய்து தருவோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பணம் கொண்டு செல்வதில் உள்ள சிரமங்களை நாம் தீர்த்து வைப்போம்.

கட்டுநாயக்கா விமான நிலையம்வரை உங்களுக்குத் தேவையான சகல வசதிகளையும், உதவிகளையும் நாமே செய்து தருவோம்.

குறைந்த கட்டணங்களுக்கும், துரிதமான ஒழுங்குகளுக்கும், நம்பிக்கைவாய்ந்த சேவைக்கும் எமது நிறுவனத்தை நாடுக.

Mack Travels LTD.,
இல: 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24791

பனம்பொருள் ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து அபகரித்த உபகரணங்களையும், பொருட்களையும் மீள ஒப்படையுங்கள்

கடந்த ஞாயிற்றுக்கிழமை [19-5-85] இரவு பத்துமணியளவில் திக்கம் பனம்பொருள் பல்தொழில் தொகுப்பு நிலையத்திலிருந்தும், பனம் சாராய உற்பத்திச் சாலையிலிருந்தும் ஆராய்ச்சிக்காகவும், ஆரம்ப உற்பத்திக்காகவும் சேகரித்து வைத்த மதுசாரத்தினையும், பெறுமதிமிக்க இயந்திர உபகரணங்களையும், ஆராய்ச்சிப்பிரிவிலுள்ள பெறுமதிவாய்ந்த ஆய்வுகூட உபகரணங்களையும், ஏனைய உற்பத்திப் பொருட்களையும் இனம்தெரியாத இளைஞர் குழுவொன்று அபகரித்துச் சென்றுள்ளது.

தமிழ் பிரதேசத்தின் மூலவளமான பனையிலிருந்து பல்வேறு உணவுப் பொருட்களையும், உற்பத்திப் பொருட்களையும் நவீன ஆராய்ச்சி மூலம் எதிர்கால சந்ததியினருக்காகவும் அல்லல்படும் தமிழ்மக்களின் நாளாந்த உணவுத்தேவையில் கணிசமான அளவினை பனம் உணவுப்பொருட்கள் மூலமும் நிறைவுசெய்யும் வகையிலான பரீட்சார்த்த உற்பத்தி நடவடிக்கைகளினையும் மேற்கொண்டும், செயற்பட்டுவந்த ஆராய்ச்சி நிலையத்தில் இப்படியான தவறான கொள்ளைகள் இளைஞர்களினால் மேற்கொள்ளப்படுவது எமது இனத்திற்குச் செய்யும் மாபெரும் துரோகமும் எமது கண்ணை நாமே குத்திக் காயப்படுத்தும் ஓர் செயலுமாகும்

பனம் சாராய வடிசாலை வடபகுதியிலுள்ள 15,000 ஏழைச் சீவல் தொழில்புரியும் அங்கத்தவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்ட ஓர் கூட்டுறவு நிறுவனமாகும் இது ஒரு மக்கள் சொத்து இந்நிறுவனத்தினால் கடந்தவரும் ஆரம்பிக்கப்பட்ட உற்பத்தி மதுசாரம் தரக்கட்டுப்பாட்டினை மேற்கொள்வதற்காகவும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கான சந்தர்ப்பங்களை அமைத்துக்கொள்ளும்வகையிலும்மேற்கொள்ளப்பட்ட ஆறு லட்சம் ரூபா பெறுமதியான மதுசாரத்தினை கொள்ளையடித்ததினால் எமது எதிர்கால மூலவள உற்பத்தி நடவடிக்கைகள் முளையிலேயே அழியும் ஆபத்தினை இச்சம்பவம் ஏற்படுத்தியுள்ளது என இயற்கைப் பொருளாதாரவளமான பனையோடு தொடர்புடைய அனைவரும் அஞ்சவேண்டியுள்ளது அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் நிதியுதவியும் மறுக்கப்படக்கூடியதாக மாறும் நிலை ஏற்படும் எனவே பனைப் பொருளாதாரத்தில் தங்கியுள்ள எமது பிரதேச மக்கள் சார்பிலும், பனம்பொருள் உற்பத்தி அமைப்புகள் சார்பிலும் அபகரித்துச் சென்ற, ஆராய்ச்சிக்கு உரித்தான மதுசாரத்தையும் ஆய்வுகூட உபகரணங்களையும், இயந்திர உபகரணங்களையும் எமது எதிர்கால பொருளாதார திட்டங்களை எனதிற்கொண்டு மீள ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைத் தாழ்மையுடன் வேண்டுகின்றோம்

[1] வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

[2] பனம்பொருள் உற்பத்தி ஏற்றுமதிக் கம்பனி.

(3) பனம்பொருள் அபிவிருத்திச்சபை.

3435

கொழும்பு சென்ற தனியார்பஸ்ஸுக்கு எச்சரிக்கை!

ஆனாலும் சில பஸ்கள் புறப்பட்டன

போக்குவரத்துச் சீர்குலைவால்

வெளிநாடு செல்வோர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் முதன்முறையாக கொழும்புக்குச் சென்ற தனியார் பஸ் வழியில் எச்சரிக்கை செய்யப்பட்டதால் கொழும்பு சேவையை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் சென்ற இந்த தனியார் பஸ், முக்கிய இடங்களில் மறித்து எச்சரிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

''வந்துவிட்டீர்கள் போங்கள் இனிமேல் வரக்கூடாது'' என்று முக்கிய இடங்களில் பயமுறுத்தப்பட்டனராம். இதனால் இன்று முதல் இந்த தனியார் நிறுவனம் கொழும்புச் சேவையை நிறுத்தியுள்ளது. இந்த பஸ் அநுராதபுரம் செல்லாமல் குருநாகல் வழியாகவே கொழும்பு சென்று திரும்பியது

மற்றொரு தனியார் பஸ் சேவை கடந்த 3 தினங்களாக நடைபெற்று வருவதாகவும், எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும், இன்றும் அச்சேவை நடைபெறும் என்றும் தெரியவருகிறது.

வேறு ஒரு தனியார் பஸ் சேவை நேற்றுக் காலை முதல் தடவையாக கொழும்புக்கு குருநாகல் வழியாக சென்றுள்ளது. இந்த பஸ்ஸில் பிரயாணிகள் நிரம்பி வழிந்து காணப்பட்டனர். இந்த பஸ் இங்கிருந்து நேற்றுக் காலை தாமதித்தே புறப்பட்டது

அதே நேரத்தில் கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களுடன் லொறிகள் தினமும் வந்து கொண்டிருப்பதாகவும், வழியில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

நேற்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மினிபஸ்ஸில் வந்தவர்கள் மிகுந்தலையில் வைத்து ஊர்காவல் படையினரால் பலத்த சோதனையிடப் பட்டதாகவும், குறிப்பாக இளைஞர்களின் கைகள், தோள்முட்டுப் பகுதிகள் பரிசோதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மினிபஸ் பகல் வேளையில் வந்ததால் தங்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று சில பிரயாணிகள் தெரிவித்தனர். (க-மா)

திக்கத்தில் பெருந்தொகை மதுசாரம் கொள்ளை!

கண்டனம் தெரிவித்து இன்று உண்ணாவிரதம்

[கொழும்புத்துறை]

திக்கம் பனம்பொருள் பல்தொழில் தொகுப்பு நிலையத்திலும், பனம் சாராய வடிசாலையிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற கொள்ளையைக் கண்டித்தும் இப்பொறுப்பற்ற அபகரிப்புக்களினால் பனைவள உற்பத்தியாளர்களும், பனைத் தொழிலாளர்களும் அடைந்துள்ள பாதிப்பைத் தெரிவிக்கு முகமாகவும் வடபகுதியிலுள்ள பனம்பொருளுடன் தொடர்புள்ள சகல ஸ்தாபனங்களும் ஒருநாள் உண்ணாவிரதத்தை மேற்கொள்ள முடிவுசெய்துள்ளன.

வடபகுதியிலுள்ள 19 தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களும், பனம் பொருள் உற்பத்தி பயிற்சி நிலையங்களும் கிராம ரீதியாக இக்கொள்ளைகளை ஆட்சேபித்து உண்ணாவிரதம் மேற்கொள்ளவிருப்பதாக அறியப்படுகிறது. முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலுள்ள பனம்பொருள் அபிவிருத்திச் ஸ்தாபனங்களும் தொடர்ந்து நடைபெறும் கொள்ளைகளால் பனை அபிவிருத்திச் சபை பாதிக்கப்படுவதற்கு பனை அபிவிருத்திச் சபையிடம் கவலையைத் தெரிவித்துள்ளன.

இன்று சனிக்கிழமை திக்கம் பனம் பொருள் பல்தொழில் தொகுப்பு நிலைய முன்றலில் இக்கொள்ளையைக் கண்டித்தும் அபகரித்துச்சென்ற சகல உபகரணங்களையும் பொருட்களையும் மீள ஒப்படைக்குமாறு கோரியும் ஊழியர்களும், பொதுமக்களும் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளனர்.

மரண அறிவித்தல்

இராஜயோகி இராஜகுலசிங்கம்

தோற்றம்: 19-11-1942 மறைவு: 18 05-1985

தர்சிகா சத்தியமூர்த்தி

தோற்றம்: 16-11-1983 மறைவு: 18 05-1985

மானிப்பாய் முன்னாள் கிராம அதிகாரி காலம் சென்ற கு இராஜகுலசிங்கம், திருமதி இராஜகுலசிங்கத்தின் சிரேஷ்ட புதல்வியும், பேத்தியும், ஞா நந்தினி, ஞா. சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயும், சகோதரியும், இ பாலசுப்பிரமணியம் (ஈழநாடு லிமிட்), இ. இராஜபுஸ்பவல்லி, இ. குலத்துங்கம், இ. இராஜமனோகரன், திருமதி இ. விஜயநாதன், திருமதி இ சத்தியமூர்த்தி, இ. இராஜகுலேந்திரன், இ சுபாசினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகளும், மருமகளும், திருமதிகள் பாலசுப்பிரமணியம், இ. குலத்துங்கம், ஜெ. இராஜமனோகரன், சி விஜயநாதன், இ. சத்தியமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும், மகளும், தர்சிகா உடுவில் காலம்சென்ற இரத்தினம், திருமதி இரத்தினம் ஆகியோரின் பேத்தியுமாவார். ஈமக்கிரியைகள் ''வினிபெக்'' கனடாவில் நடைபெற்றது.

தகவல்:

இ அமிர்தவல்லி (தாய்) இ. பாலசுப்பிரமணியம் (சகோதரன்)

(3434)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the Genera Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P.O. Box 49. Telegram Eelanadu. Telephone: 22389-24126

இன்று சொற்பொழிவு

[வண்ணார்பண்ணை)

1936 - 39-ல் ஸ்பானியா பற்றிய சொற்பொழிவு நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் திரு. கே கே நடராசா தலைமையில் காரைநகர் யாழ்ரன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இந்தச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் டாக்டர் ஆ. தருமலிங்கம் சிறப்புரை நிகழ்த்துவார். லங்கா பரத ஒற்றுமை முன்னணியின் ஆதரவில் இது இடம் பெறுகிறது.

தீவிரவாதத்தை—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களின் தலைமையின் கீழ் சம்பந்தப்பட்ட தொகுதி மக்களின் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிப்பதாகவும் இந்தக்கடமைகளை நிறைவேற்றுதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இந்த அதிகாரத்தைத் தாம் கொடுத்திருப்பதாகவும் கூறினார். (ரா)

இலங்கையை.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

''திருவனந்தபுரத்திலிருந்து இலங்கையை வந்தடைய ஏழு நிமிடங்கள் போதுமானது. இலங்கையை இந்தியா கைப்பற்றுவதன் மூலம் இலங்கையில் இடம்பெறும் அழிவுகளைத் தடுத்து நிறுத்தமுடியும். கூடவே இங்கு அமைதியையும் நிலைநாட்டலாம்.

''இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி இலங்கைப் பிரச்னையைத் தற்போது சமயோசிதமாக அணுகிவருகிறார். இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்தியாவின் உதவி அத்தியாவசியமானதாகும்.

''கொழும்பில் பயங்கரவாதிகள் அதிகளவில் இருப்பப்பது குறித்து தகவல்கள் கிடைத்துள்ளன. இதனையடுத்து சிவில் பாதுகாப்புத் திட்டத்துக்கான ஆலோசனை ஒன்றை வழங்கியுள்ளேன். விரைவில் இது அமுலாக்கப்படும்.

தமிழின...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு பெரும் தொல்லையாகமாறிவிட்டது. ஏற்கனவே திட்டமிட்ட நடவடிக்கை எடுத்திருந்தால் இதனை ஒழித்துக்கட்டியிருக்க முடியும்'' என்று களனித் தொகுதி எம். பி. திரு. சிறில் மத்யூ பாராளுமன்றத்தில் நேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; சுமார் பத்து ஆண்டுகள் முடிவடைந்தும்கூட அரசாங்கத்தால் இந்தப் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தமுடியாமல் போய்விட்டது என்று கண்டனம் தெரிவித்தார்.

மொகமட் குற்றச்சாட்டு

''மார்க்ஸிச ஸ்தாபனங்களும், வெளிநாட்டுச் சக்திகளும் தீவிரவாதத்துக்கு ஆதரவும், உதவியும் அளித்துவருகின்றன'' என்று போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம், எச். மொகமட் பாராளுமன்றத்தில் நேற்றுப் பேசுகையில் தெரிவித்தார்.

இந்தியத் துணை அமைச்சர் ஜனாப் சர்ஷித் ஆலம் கானின் உரை சம்பந்தமாகக் கருத்து வெளியிட்ட ஜனாப் மொகமட். முஸ்லீம் மக்கள் தமிழ்மொழியைப் பேசுகின்றபோதும் அவர்களைத் தமிழ் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருத முடியாது என்றும், தீவிரவாதிகளாற் பெரிதும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் தீவிரவாதத்தை எதிர்த்தே வருகின்றார்கள் என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் பேசுகையில்: கிழக்கு மாகாணத்தை ஈழம் ராஜ்யத்துடன் இணைக்க ஒருபோதும் முஸ்லிம்கள் விரும்பமாட்டாகள் என்று கூறியதுடன் சிங்கள முஸ்லிம் மக்களுக்கிடையிலான இடைவெளியை விரிவுபடுத்தவேண்டாமென்று எதிர்க்கட்சியினருக்கு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்தார். (ரா)

பி. டி. ஐ. .....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பி. டி. ஐ. செய்தி ஸ்தாபனம் வழங்கிய அறிக்கையை பரிசீலித்த பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அரசசட்டத்தரணி ஹெக்டர் யாப்பா நீதிமன்றில் தெரிவித்து கிருஷன் ஆனந்த் மீதான வழக்கை இலங்கை அரசு வாபஸ் பெறுவதாகத் தெரிவித்தார்.

கறுப்பன்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யடித்துக் கொலை செய்துள்ளதாகவும் ஆதலால் இந்தியா தலையிடுவது கடமை என்றும், இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பவேண்டும் என்றும் இம்மகஜரில் கோரப்பட்டிருந்தது (இ)

சோவியத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வழங்கிய ஆலோசனைகளை இலங்கை உதாசீனம் செய்திருப்பதையே அறிய முடிகிறது.

இலங்கையில் இடம்பெறும் இனப்படு கொலைகளை உடனடியாக ஒரு முடிவுக்குக் கொண்டுவரும்படி மனித உரிமைகள் மீதான ஐ. நா. வின் தலைமைச் செயலாளருக்கு மகஜர் ஒன்றையும் தமிழர் விடுதலைக் கூட்டணி அனுப்பி வைத்திருக்கிறது.

''வடபகுதியிலிருந்து 20 ஆயிரம் தமிழர்கள் அகற்றப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது இலங்கைத் தீவிலிருந்து தமிழர்களை அகற்றும் ஒரு ஆரம்ப நடவடிக்கை'' என்றார். (கி)

யாழ். ஆஸ்பத்திரிக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலிண்டர்'களையும், மருந்து வகைகளையும்கப்பலில்கொண்டு வர ஒழுங்குகள் மேற்கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங் ஜெயபாலசிங்கம் கப்பல் நிறுவனத்தினர் இதற்கான ஏற்பாடுகளை உடனடியாகவே செய்துள்ளனர்.

ஏற்கனவே, 69 வெற்று 'காஸ் சிலிண்டர்'கள் 'பயனியர் எலைற்' எனும் (மாலைதீவு) கப்பலில் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றுடன் பல பெட்டிகளில் பழுதான மருந்துகளும் அனுப்பப்பட்டுள்ளன. 'காஸ் சிலிண்டர்' களும் மருந்துவகைகளும் அடுத்தவாரம் கப்பல் மார்க்கமாக யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

ஜே. ஆர்.-ரஜீவ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் மனிதக் கொலைகளுக்கு ஒரு முடிவு கட்டும் விதத்தில் உயர்மட்ட பேச்சுக்களை நடத்துவதற்கு இந்தியாவுக்கு வரும்படி இலங்கை ஜனாதிபதிக்கு திரு. திரு ராஜீவ்காந்தி ஏற்கனவே அழைப்பு விடுத்துள்ள போதிலும் இலங்கையில் உள்ள அரசியல் நெருக்குதல்களின் காரணமாக திரு. ஜெயவர்த்தனா இவ்வழைப்பைப் பூர்த்தி செய்யாமலே தட்டிக்கழிக்கிறார் எனக் கருதப்படுகின்றது.

4 இளைஞர் பற்றி தகவல் இல்லை

(கொழும்பு)

சவூதியிலிருந்து கொழும்பு வந்து தனியார் வாகனமொன்றில் யாழ் நோக்கி வந்த நான்கு இளைஞர்கள் பற்றி நேற்றிரவுவரை தகவல் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணம் வரும் வழியில் இவர்கள், இடையில் காணாமற் போய்விட்டதாக செய்தி வெளிவந்தது வாசகர்கள் அறிந்ததே.